
# குருதேவர்

தேவகுமார நிலை





ஞான் சிறப்பு மலர்
காணிக்கை ரூ. 1-25
தொலைபேசி: 619994

# வரலாற்று முதன்மையும், சிறப்பும் மிக்க வெற்றி பல கண்ட இ.ம.இ. யின் இரண்டாவது பயிற்சி முகாம் 14-6-88 முதல் 19-6-88 வரை

1. இம்மண்ணுலகின் தோற்றம் முதல் இன்று வரை இங்கு இறங்கி வந்து ஒரு நாள் கூடச் செயல்பட்டிடாத அருள்மிகு வியாழபகவான அவர்கள் நிறை-யக்ஞர், நான்குயுக நாயகம் ஆகிய குருதேவரால் 16—6—88 திருச்சி ஓயாமெரிச் சுடலேயில் நிகழ்ந்த ஐந்தீ வேட்டல் பூசையாலும், முத்தீ ஓம்பல் பூசையாலும் பதினெட்டு வகைப்பட்ட பதினெண் சித்தர்களின் நெறிமுறைப் பூசைகளாலும் நிலே-யாகத் தங்கிச் செயல்படவாரம்பித்து விட்டார். இதனல், அருளாட்சி நாயகமாகவும், தத்துவ நாயகமாகவும், சுக்கிராச்சாரியாராகவும் (வெள்ளி பகவான்) விளங்-கிய குருதேவர் வியாழபகவானுகவும் மாறிவிட்டார். இப்பயிற்சி முகாமின் மாபெரும் வெற்றி இது.

2. முதல் யுகத்தில் கல்மலேயாக்கப்பட்ட அண்டபேரண்ட இராக்கம்மாக்-களில் சேலம் மாவட்ட இராசிபுரவட்ட [கடந்தப்பட்டி மலேயில் இப்பயிற்சி முகா-மிற்காக குருதேவர் செய்த ஓம ஓக யாக யக்ஞ வேள்வித் தீச்சுடர்களின் அருஞ் செயலால்] கடந்தப்பட்டி அருகிலுள்ள அண்ட பேரண்ட இராக்காச்சியை இரண்டாவது பயிற்சி முகாமிற்காகப் புத்துயிர்ப்பு செய்யும் முயற்சி (சாப நீக்கம்) முழு வெற்றி பெற்றது 81பனைமர உயரமுள்ள தேவி அண்டபேரண்ட இராக்கம்மா அவர்கள் திருவரங்கம் சித. சத்திரத்திற்கே வந்திருந்து குருதேவரை வணங்கி வாழ்த்தும் பெற்றுர். அவரின் முழு உதவியும், துணேயும் இப்பயிற்சிமுகாமிலிருந்து இ.ம இ யைச் சேர்ந்த அனேவருக்கும் கிடைக்கும். பயிற்சி முகாமின் சில நாட்-களுக்கு உள்ளேயே பலர் இந்த தேவி அண்ட பேரண்ட இராக்காயியை உணரவும், அவரின் அருளேப்பெறவும் முடிந்தது. இதுவும் இப்பயிற்சி முகாமின் மாபெரும் வெற்றியே.

3. எதிர்பாராது நிகழ்ந்த ஈசுவரிதேவியை ஒட்டிய பல நிகழ்ச்சிகளாலும்; சத்தி, கன்னிகாபரமேசுவரி, பாரசத்தி, மகாசத்தி முதலியோர்களே மானுடவடிவில் எழுப்பிட்ட காரணங்களாலும் இ.ம.இ. யின் தலேவரும், பன்னிரண்டாவது பதி-னெண்சித்தர் பீடாதிபதியுமான குருதேவர் இன்றைக்கு 43, 73, 089 ஆண்டு-களுக்கு முன்னல் இந்து மதத்தைத் தோற்றுவித்த ஆதிசிவன் தன்னேச் சிவ நிலேயில் நிறுத்திச் செயல்பட்டிட்டது போல்; இப்போது தம்மையும் முழுக்கச் சிவ நிலேயில் இருத்திச் செயல்பட்டு இந்தப் பயிற்சிமுகாமை இயக்கி நிறைவு செய்தார். a) ஆண், பெண் என்ற வேறுபாடின்றி உடம்பில் ஐந்து விளக்கேற்றி அருட் பெருஞ்சுடரை ஆவி ஆன்மா ஆருயிரோடு இணேத்தல். b) குண்டலினி யோகப் பயிற்சி c) ஓகாசனயோகாசனப் பயிற்சி d) வாக்காகவும், மறையாகவும் வாழும் அருளுலகப்பேருண்மைகளில் சில உரிய சூழலில் விளக்கப்பட்டன e) கொள்ளிட மாற்றில் இட்டும், தொட்டும், சுட்டியும அருள் வழங்கல் நிகழ்த்தியமை முதலியன இப்பயிற்சிமுகாமின் வெற்றிச் சிறப்புக்கள். விரிவான கட்டுரை விரைவில் வெளிவரும்.

முற்றும்

# தமிழின விடுதலையே உலக ஆன்மீக விடுதலை

[கி. பி. 1772 இல் எழுதப்பட்டது]

இம் மண்ணுலகில் ஆன்மீக உணர்வு, எண்ணம், சிந்தனை ..... முதலியவை விளைந்திட அறிவியல் வித்துக்களை விதைத்தவர்கள் பதினெண் சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளுமே ஆவார்கள். இவற்றைப் பயிர்செய்யும் அருளுலக உழவர்களாகத் தேவர்கள், தேவபதிலிகள் (அவதாரங்கள்), தெய்வப் பிறப்புக்கள், தேவதூதர்கள்... என்று (48) நாற்பத்தெட்டு வகை அருளாளர்கள் தொடர்ந்து வாழையடி வாழையாக இம்மண்ணுலக இறுதிக்குள் தோன்றுமாறு நியதி வகுக்கப் பட்டது.

உலகெங்கும் பயிரினங்களும், உயிரினங்களும் தோன்றிக்கொண்டே இருக்கும். காலப்போக்கில் அருளாளர்களின் சாதனைகளும், போதனைகளும் தேய்வதும், ஓய்வதும், மங்குவதும், மறைந்துறைவதும்..... நேரிட்டிடும் இவற்றால், தனிமனிதர்கள் தங்களுடைய அகம்பாவம், ஆணவம், கன்மம், மாயை, பேராசை எனும் ஐந்தால் ஐம்புலன்களின் வெறிகளுக்கு இரையாகிப் பிறர்நலங்களையும் இரையாக்கிடலும், சிறையாக் கிடலும், குறையாக்கிடலும், கறையாக்கிடலும்... நிகழ்ந்திடும் அவற்றால், பேரழிவு உலக ஆன்மீக வாழ்வுக்கு ஏற்பட்டிடும் நிலை விளைந்திடும். அப்பொழுதே, பதினெண் சித்தர் பீடாதிபதிகள் தோன்றிடுவர்.

இம்மண்ணுலகுக்கு மட்டுமின்றி; இந்த அண்ட பேரண்டங்களுக்கே அருளுலகக் கருவாக, குருவாக, தருவாக, திருவாக இருப்பவர்களே தமிழும் தமிழர்களும். எனவேதான், தமிழினத்தில் வாழையடி வாழையாகக் குருபரம்பரையில் பதினெண் சித்தர் பீடாதிபதிகள் தோன்றித் தமிழ்மொழியையும் தமிழர்களையும் அனைத்து வகையான மாயைகளிலிருந்தும், உலகியல் அடிமை நிலைகளிலிருந்தும் விடுவிடுக்கிறார்கள். அப்படித் தமிழ்மொழியும், தமிழர்களும் விடுதலை பெற்ற பிறகு தான்; உலகம் முழுதுமுள்ள மொழிகளும், பல்வேறு இனமக்களும், அவர்களுக் குரிய அகப்பண்பாடுகளும், புறநாகரிகங்களும், விடுதலை பெற்றிடுகின்றன.

இவற்றையெல்லாம் எண்ணித்தான் எந்தை, நாமக்கல் மோகனூர் பாழ் வெளி எய்தியருளிய கைலாசபதி மகனார் உருத்திரம்பிள்ளை நான்காவது தமிழ்ச் சங்கத்தின் தொடர்ச்சியாகவும், ஐந்தாவது தமிழ்ச்சங்கமாகவும் தோற்றுவித்த தமிழ்வளர்ச்சிக் கழகம் தமிழின் வளவளர்ச்சிக்காகவும் உலக ஆன்மீக மறுமலர்ச்சிக்காகவும் பாடுபட்டது. ஏராளமான ஓலைச்சுவடிகள் படியெடுக்கப்பட்டு நாடெங்கும் உலாவந்தன; தாராளமாகப் பட்டிதொட்டிகளிலும், குக்கிராமங்களிலும், சிற்றூர் களிலும், பேரூர்களிலும் உள்ள மக்கள் தமிழின் சுவையையும் பயனையும் அடைந்திடத் தமிழ்ப்புலவர்கள், அறிஞர்கள், மேதைகள், நாவலர்கள், பல்வேறு வகைக் கலைஞர்கள் உருவாக்கப்பட்டுச் செயல் பட்டிட்டனர். அதனால், திரைகடலோடித் திரவியங்களைத் திரட்டிய தீரத் தமிழ்ச் செல்வர்கள்; "தமிழினமும் மொழியும் விடுதலை பெறத் தமிழரின் ஆன்மீக உணர்வும், எண்ணமும், சிந்தனையும், அறிவும் விடுதலை பெற வேண்டும்" என்ற குருபாரம்பரிய வாசகத்தை ஏற்று அதற்குரிய ஞானப் பள்ளியான் நாற்பத்தெட்டு வகைப்பட்ட வழிபாட்டு நிலையங்களையும் மீண்டும் நிலைகுலையாக் கலைக்கோயில்களாகப் புதுப்பித் தார்கள். எங்கும் கோயில்களின் திருப்பணிகள், சமய இலக்கிய விரிவுரைகள், பத்திப்

பாடல்வளர் பசணை (பசு + அணைய) மடங்களின் தோற்றங்கள். மதம் வளர்க்கும் கலை நிகழ்ச்சிகள். எட்டறிவு எட்டாப் பட்டறிவு மக்கள் ஆன்மீகச்செல்வம் அடைந்திட உதவும் திருவிழாக்கள். சிருஅர் முதல் பெரியவர் வரை வசதிவாய்ப்புக்களுக்கேற்பச் சாரிசாரியாகத் திருத்தலங்களைக் கண்டுவர அருட்பயணங்களை மேற்கொண்ட திருக் கூட்ட உலாக்கள்...... என்று தமிழ் கூறும் நல்லுலகமே மறுமலர்ச்சியும் வலிமைச் செழிச்சியும் பெற்றிட்டது.

அந்த நிலையே செந்தமிழ் நாட்டின்சொந்த நிலையாக என்றென்றும் இருந் திருக்குமேயானால்; தமிழ் மொழி விடுதலை; தமிழின விடுதலை! தமிழரின் இந்துமத விடுதலை [வடஆரியரின் ஹிந்துமதம் வேறுபட்டது]... முதலிய பணிகள் அனைத்தும் இனிதே நிறைவேறியிருக்கும். அதனால், இசுரவேலரின் எழிச்சியும், அராபியரின் எழிச்சியும் நாற்பத்தேழாவது தேவகுமாரனாலும், நாற்பத்தெட்டாவது தேவதூ தராலும் உலக ஆன்மநேய மறுமலர்ச்சிக்கு உதவியது போல் தமிழின எழிச்சியும் உலக ஆன்மீகவிடுதலைக்கு உதவியிருக்கும். அவற்றின்பயனாக உலகச்சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடைமைக் கூட்டுறவுச் சமுதாயம் இந்தக் கண்டப்ப கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ. இராமசாமிப்பிள்ளை தோன்றுவதற்கு முன்னரே அமைந்திருக்கும். எமது கருத்தும், முயற்சியும், காலமும் வரப்போகும் பன்னிரண் -டாவது பதினெண் சித்தர் பீடாதிபதியின் அருளாட்சிக்குக் கட்டியங் கூறுவனவாக -வே செலவாகியிருக்கும்.

அந்தோ? செந்தமிழரில் சொந்தத் தாய்நாட்டையும், இனத்தாரையும், மொழியையும், மதத்தையும், பண்பாட்டையும், நாகரிகத்தையும் மதிக்காமல், விரும்பாமல், நம்பாமல் மறந்தும் துறந்தும், மறுத்தும், வெறுத்தும், எதிர்த்தும், துரோகித்தும், அன்னியரிடம் காட்டிக் கொடுத்தும், அன்னியர்களுக்கு அடிமைப் படுத்தியும்... செயல்படுபவர்களன்றோ மிகுதியானவர்களாகி விட்டார்கள். இவர்கள் கோழைப் பண்பால் இப்படிச் செய்யவில்லை. இவர்களைப் பிடித்தாட்டும் சுயநல வெறியும், பேராசை வெறியும், அகம்பாவமும், ஆணவமும், கன்மமும் அன்றோ இப்படியெல்லாம் செயல்பட இவர்களை ஊக்குவிக்கின்றன!?!?!?.

இவற்றுக்கெல்லாம் மருந்து பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி -யின் திருத்தோற்றம்தான். ஆனால், அதற்கும் நம்மவர்களில் கணிசமானவர்கள் அன்னியர்களின் பட்டம் பதவிகளுக்காகவும், கூலிகளுக்காகவும், பரிசுகளுக்காகவும், பாராட்டுகளுக்காகவும் மானமிழந்து மாற்றாரிடம் மண்டியிட்டு அடிமைகளாகவும், எடுபிடிகளாகவும்... வாழும் கேடுகெட்ட குடிகெடுக்கும் வாழ்க்கை முறையை விட்டொழிக்கச் செய்ய வேண்டும். நமது பண்பாடு, நாகரிகம், மொழி, இனஉரிமை மதப்பெருமை, வரலாற்று மூலங்கள்... முதலிய அனைத்தையும் பாதுகாத்திடும் கோயில்கள் பாழடைந்து கிடந்திடுவதை மாற்றிட வேண்டும். நமது கலைக்கோயில் -கள் அனைத்தும், அந்தந்த வட்டாரத்து மக்களை மொழியறிவு, இலக்கிய அறிவு வாழ்வியல் அறிவு, மொழிப்பற்று, இனப்பற்று, மதப்பற்று, தன்மான உணர்வு, தன்னம்பிக்கை உணர்வு, ஆன்மீக விடுதலையுணர்வு... முதலியவைகளைப் பெறச் செய்யும் ஞானப்பள்ளியாக, பாடிவீடாக, பாசறையாக, கலைக்கருவூலமாகப் பயன் படுத்திடும்படிச் செய்யவேண்டும். நமது புலவர்களையும், கவிஞர்களையும், கலைஞர் -களையும் விரிவுரையாளர்களையும், அறிஞர்களையும்... நம்மவர்களுக்கு உரிமையுணர் -வும், தமிழின விடுதலையுணர்வும் இந்துமத விடுதலையுணர்வும், எதற்கும் அடிமை -யாகாத தன்மான உணர்வும் ஊற்றெடுக்கச் செய்யுமாறு உழைப்பாணை விடுக்க வேண்டும். இவற்றிற்காகவே இந்து மறுமலர்ச்சி இயக்கத்தை தோற்றுவிக்கிறோம் யாம்.

—கருவூரர் வழிவந்த கண்டப்ப கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார்

**உ. இராமசாமிப்பிள்ளை**

# இ. ம. இ. கொள்கை விளக்கப் பாடல்

**சரணம்**

**பிறமண்ணினர் மதமே வேதமதமாகும்! இதைப்**
**பிரித்துக் கூறல் எப்படிப் பேதமாகும் ஆஆஆ**
**ஆஆஆ ஆஆஆ ஆஆஆ ஆஆஆ**
(மீண்டும் சரணம்)

**பல்லவி**

பதினெண் சித்தர் நெறியே இந்துமதமாகும்
ஆஆஆ ஆஆஆ ஆஆஆ
அஉஓம் அஉஓம் அஉஓம்
அகர உகர மகர எழிச்சியே இந்துமதமாகும் -இதுவே
ஆவி ஆன்மா ஆருயிர் பெறும் விளக்கமாகும்
அகர உகர மகர எழிச்சியே இந்துமதமாகும்
இந்துமதமாகும் இந்துமதமாகும் இந்துமதமாகும் -இந்த
இந்துமதமே இம்மண்ணின் மூத்ததமிழின மதமாகும்
இம்மண்ணின் மூத்ததமிழின மதமே இந்துமதமாகும்
அஉஓம் அஉஓம் அஉஓம் அஉஓம் அஉஓம்
அகர உகர மகர எழிச்சியே இந்துமதமாகும் -இதுவே
ஆவி ஆன்மா ஆருயிர் பெறும் விளக்கமாகும்
இந்துமதமே சிவநெறியெனும் சிவநெறியாகும் -அதுவே
திராவிடரின் சைவநெறியாகும் திராவிடரின்
சைவநெறியாகும் திராவிடரின் சைவநெறியாகும்
இந்துமதமே திராவிடரின் சிவநெறியான சைவ சமயமாகும்
அகர உகர மகர எழிச்சியே இந்துமதமாகும்
அஉஓம் அஉஓம் அஉஓம் அஉஓம்
இந்த மண்ணுலகின் முதல் மதமே இந்துமதமாகும் -அதுவே
மதத்தத்துவங்களின் மூலமாகும் முதலாகும் தாயாகும்
எந்த மதமும் சொந்தமாகிடும் இந்த இந்துமதத்துக்கே
பதினெண் சித்தர் நெறியே இந்துமதமாகும் -இதுவே
செந்தமிழரின் சொந்தமதமாகும்! சொந்தமதமாகும்! சொந்தமதமாகும்!
பிறந்தோரையெல்லாம் ஒன்றாக எண்ணும் மதமே இந்துமதம்
பிறந்தோருக்குள்ளே பேதங்களை வளர்க்கும் மதமே வேதமதம்-இதைப்
பிரித்துக் கூறல் எப்படிப் பேதமாகும்? பேதமாகும்?
பிறமண்ணினர் மதமே வேதமாகும் -இதைப்
பிரித்துக் கூறல் எப்படிப்பேதமாகும்? எப்படிப்பேதமாகும்? எப்படிப் பேதமாகும்?
ஆஆஆ ஆஆஆ ஆஆஆ ஆஆஆ ஆஆஆ
அஅஅ அஅஅ அஅஅ அஅஅ அஅஅ
உஉஉ உஉஉ உஉஉ உஉஉ உஉஉ
மமம மமம மமம மமம மமம
அஉம அஉம அஉம அஉம அஉம
அகர உகர மகர அகர உகர மகர அகர உகர மகர அகர உகர மகர
அகர உகர மகர

ஓஓஓ ஓம் ஓஓஓ ஓம் ஓஓஓ ஓம் ஓஓஓ ஓம் ஓஓஓ ஓம்
இந்த மண்ணுலகின் முதல் மதமே மூலமதமே மூத்த மதமே இந்துமதமாகும்.

**குறிப்பு:** இப்பாடல் முதல் விசயாலயன் காலத்தில் பாடப்பட்டபாட்டு. பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதியால் எழுதப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

குருதேவர் அறிக்கை 50

## அறிவிப்பு

நமது அனைத்து வகையான பூசைகளிலும் இசையோடு பாடத் தெரிந்த ஒருவர் ஒவ்வொரு வரியாகப்பாட மற்றவர்கள் அதைத் திருப்பிப் பாடவேண்டும். ஊர்வலம், பொதுக் கூட்டம், கோயில் சுற்றி வருதல்..... முதலியவற்றில் இப்பாடல் இசையோடு பாடப்படுதல் நல்லது. இதே போல், ஞானஉலாக் கைகொட்டி முழக்கம் முழுவதும் வெளியிடப்படும். அதனை மேலே கூறியபடி பலரும் சேர்ந்திருக்கும் போதும், தனி மனித பூசையின் போதும் இனிமையான குரலில் கூறிட வேண்டும்.

வழங்குபவர்: **பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி**
**குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர்**
**அரசயோகிக் கருவூரார்**

---

# குருபாரம்பரியம் கூறும் குருமாரியம்மன் தோற்றம்

1 பதினெண்சுடர் முடியுடையாள் ஒன்பதுநாகக் குடையுடையாள்

2 இரண்டு கைகளால் மடியில் குழந்தை யேந்தியவள்

3 இரண்டு கைகளால் வீணை மீட்டி சைப்பவள்

4 இரண்டு கைகளில் ஏடும் சூலமும் ஏந்தியவள்

5 இரண்டு கைகளில் உடுக்கையும் அக்கினியும் தாங்கியவள்

6 இரண்டு கைகளில் சங்கும் சக்கரமும் கொண்டவள்

7 குருவானள் குருக்களானள் குருமாரானள் குருதேவரானள் குருபீடமேயானள்

8 குருமாரியே கருநிலையாகிருள் குருநிலையாகிருள் தருநிலையாகிருள் திருநிலையாகிருள்

9 இடக்கால் பீடமாக்கியவள் வலக்கால் செந்தாமரை கொண்டவள்

10 அருளாட்சிக்காக மாரியப்பன் மாரியம்மன் செயலுறச் செய்பவளிவளே

11 அருட்பயிரின உயிரினச் செழிப்பால் அருளாட்சி காப்பவளிவளே

12 குருமாரியே போற்றி! குருமாரியே போற்றி! குருமாரியே போற்றி!
குருமாரியே போற்றி! குருமாரியே போற்றி!

அருளார்ந்த அறிவிப்புக் குருவாணை

**அருளாட்சி நாயகர்; தத்துவ நாயகர்,**

குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்

பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி

**பதினெண் சித்தர் பீடம், பதினெண் சித்தர் மடம்.**

# சர்வயக்ஞமும் ஆதிசங்கராச்சாரியாரும்

'ஆதி சங்கராச்சாரியார் ஒரு தமிழரே' — குருபாரம்பரியச் செய்தி

'அத்வைதம்' என்றால் 'எல்லோரும் எளிதில் புரிந்து கொள்ள முடியாது' என்றும்; 'தன்னையே முழுமுதற் கடவுளாகக் கருதிச் செயல்படுமாறு போதிக்கும்' என்றும்; 'அருவ வழிபாட்டு மதம்' என்றும்............குருபாரம்பரிய வாசகங்கள் விளக்குகின்றன, எனவேதான், பதினெண் சித்தர்களும், மற்ற சைவ மடங்களும் காலடி ஆதிசங்கராச்சாரியாரையும் நாயன்மார்கள், ஆழ்வார்கள் போன்று ஓர் அடியாராக ஏற்றுப் போற்றாமல் விட்டுவிட்டார்கள். தென்பாண்டித் தமிழனாகிய ஆதி சங்கராச்சாரியார் ஆரம்பம் முதல் நெடுங்காலம் சிவபெருமான் போன்று நீண்ட அகண்ட உயரிய சடை முடியும், தாடி மீசையும் வைத்திருந்தார்; நெற்றியில் திருநீறு, குங்குமம், மஞ்சள், சந்தனம், கருஞ்சாந்து, மை என்று ஆறு பொருட்களும் (ஐந்து பொருட்கள் என்றும் சில குறிப்புகள் உள்ளன) அணிந்திருந்தார்; தூய வெள்ளாடை அணிந்திருந்தார்; கையில் திரிசூலம், மயில்பீலி, மெய்ஞ்ஞானக்கொடி வைத்திருந்தார்; அன்றாடம் பூசைகளில் பதினெண் சித்தர்களின் தெய்வத் தமிழை, அருளூறு பூசாமொழிவாசகங்களையே ஓதினார்; தன்னால் முடிந்த வரை ஏந்தரீக தாந்தரீக மாந்தரீகப் பூசைகளில் பயிற்சி செய்தார். ஆனால், அவரால்குருவருளால் மாந்தரீகச் சித்தியாளன், தாந்தரீகவல்லி என்ற நிலையை மட்டும் தான் அடைய முடிந்தது; அவரால் அதற்குமேல் சித்தி பெற முடியவில்லை.

இவர், சிறப்பாக, இராமாயண காலச் 'சூரியனார்' போல் வாழ வேண்டும் என்று ஆசைப்பட்டு; வடநாடு முழுதும் சுற்றுப்பயணம் சென்றார். ஒருமுறை தமிழகம் முழுதும் சுற்றுப்பயணம் செய்தார். ஏனென்றால், இவர் சூரிய குலத்தைச் சேர்ந்தவர் என்பதாலும்; 'காகபுசுண்ட குல இளஞ்சூரியன்', 'திராவிட ஆச்சாரிய பீடம்' என்ற பட்டங்களையும்; 'ஞானசித்தன்', 'நவநாதசித்தன்' 'வேத சித்தன்.' என்ற பட்டங்களையும்; 'தமிழ் அந்தணன்,' 'தென்பாண்டித் தமிழன்', 'உச்சிக்குடுமியான்' 'வெள்ளாடை மேனியான்,' 'தமிழ் குருக்கள்,' 'கருணீக்க சைவ வேளாளர் கொழுஞ்சுடர்,' 'திராவிடச் சிசு,' 'திருஞானசம்பந்தரின் குலக்கொழுந்து', 'தமிழின இந்து மதத்தைச் சமசுக்கிருத ஹிந்து மதமாக்கியோன்.'..........என்ற பட்டங்களையும் பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதியால் வழங்கப்பெற்றவர் என்பதாலும்தான் இவர் 'யாக்ஞம்' செய்ய முயன்றார். வடவேங்கடம் முதல் தென் இமயம் வரை உள்ள பகுதிதான் கடலுக்குள் மறைந்த 'குமரிக் கண்டம்' எனப்படும் இளமுறியாக் கண்டத்தின் எஞ்சிய பகுதி என்பதால்; இதுதான் கடவுளர் நாடு, அருளுலக விதைப்பண்ணை, அருளுலக நாற்றுப்பண்ணை, அருளுலக மூலக் கருவறை, அருளாணு ஊற்றுக்கள் மிகுந்த இடம் என்ற பேருண்மைகளை உணர்ந்து பல இடங்களைத் தேர்ந்தெடுத்து யக்ஞங்கள் செய்தார். அவருடைய அரிய பெரிய முயற்சிகளைப் பாராட்டி இந்துமத மறுமலர்ச்சிக்காகவும், வளவளர்ச்சிக்காகவும், ஆட்சி மீட்சிக்காகவும் பன்னெடுங்காலமாகப் பொதிகை மலையின் மூடிய குகைக்-குள் நீள் தவத்திலிருந்து விடுபட்டு வந்தவரும்; பிற்காலத்தில் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டியவரும்; (1008 சிவாலயங்களையும், 243 சத்தி பீடங்களையும், 108 திருப்பதிகளையும் கட்டியவர், புதுப்பித்தவர்) பிற்காலச் சோழப் பேரரசை இந்துமத அருட்பேரரசாக உருவாக்கியவரும்; பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதியுமான குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் நேரில் எழுந்தருளி இந்தக் காலடி ஆதிசங்கராச்சாரியாருக்கு 'கலைமகளை' வரவழைக்கும் மந்தர, மந்திர, மந்திற, மாந்தர, மாந்தரீகங்களை ஓதுவித்து துணையிருந்து யாக்ஞத்தைத் நிகழ்த்தினார்.

ஏனெனில், சூரிய குலத்தாரால் யக்ஞத்தை முழுமையாக்க முடியாது. அதனால் தான் சந்திர குலத்தைச் சேர்ந்த பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் தாத்தா காவிரியாற்றங்கரைக் கருவூரார் துணை நின்றார். அதன் பயனாகத்தான் கலைமகள் நேரில் தோன்றி அருளாட்சி நாயகமான பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதியின் பரிந்துரையின்படி இவருக்கு **'சர்வ யக்ஞர்'** என்ற அருட்பட்டத்தை வழங்கினாள். அதையே காலடி ஆதிசங்கராச்சாரியார் தம்மு-டைய வாழ்வின் மிகப்பெரிய சித்தியாக ஏற்றுத் தன்னை **'கலைமகள் அடியார்'** என்று பூரிப்போடும் பெருமையோடும் கூறிக்கொள்ளலாரம்பித்தார். அவர் இப்படிக் குறித்துக் கொண்டதைத்தான் அவர் பெயரால் தோன்றிய சங்கராச்சாரி-யார்கள் சமசுக்கிருத மொழிச் சொல்லான **'சரசுவதி'** என்ற பட்டப்பெயரைச் சேர்த்துக் கொள்ளலானார்கள்.

<u>சிறப்புக் குறிப்பு:</u>

**ச(ர்)ருவ யக்ஞர்** இது சமசுக்கிருதச் சொல்லல்ல

**சருவம்** + யக்ஞர் — **சருவயக்ஞர்**

'சருவம்' என்ற சொல்லுக்கு **சட்டி** அல்லது **பானை** (வாய் அகன்ற பானை) என்று பொருள் இது தூய தமிழ்ச் சொல். அதாவது; யக்ஞத்தின் பயன்கள் தேங்கியிருக்கக் கூடிய பாத்திரம்.

கலைமகள் யக்ஞத்தின் பயனை பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி -யின் பரிந்துரையால் காலடி ஆதி சங்கராச்சாரியாருக்கு அருவி போல் வழங்கி -னாலும்; இவர் சூரிய குலத்தவர் என்பதாலும், பீடாதிபதியல்ல என்பதாலும் இவருடைய உழைப்புக்கும், முயற்சிக்கும் ஏற்பவே அந்த யக்ஞப் பயன் இவரிடம் தங்கிற்று. எனவேதான், **'யக்ஞப் பயன் தங்கியிருக்கக் கூடிய பாத்திரம் போன்றவர்'** என்ற பொருளுக்குரிய **'சருவயக்ஞர்'** (யக்ஞ (ப் பயனுள்ள) சட்டி, பாத்திரம்) என்ற அருட்பட்டம் இவருக்கு வழங்கப் பட்டது.

---

# குருபாரம்பரிய வாசகங்கள்

(1) ''அருளுலகப் பாதுகாப்புக்களையும், சத்தி சித்தி முத்திகளையும் வேண்டு -பவர்கள் கிணற்று நீராக இருக்கின்ற குருதேவரின் அருளை முயற்சி என்கின்ற நெடுங்கயிற்றையும்; முழுமையான நம்பிக்கை மிக்க குருபத்தி எனும் தோண்டியையும் பயன்படுத்தித்தான் இறைத்து நீராடியும், தாகம் தீர்த்தும், உணவு சமைத்தும், புறத் தூய்மைகளைச் செய்தும் வாழ்ந்திடல் வேண்டும்.''

(2) ''அருள் பேரொளியாக வழங்கப்பட்டாலும்; கண்களை இறுக மூடிக் கொள்ளும் இருண்ட நெஞ்சங்களை உடையவர்களை ஏதும் செய்ய இயலாது.''

(3) ''ஒவ்வொரு மனிதனும் தனியாகப் பிறந்து தனியாகவே இறக்கிறான். அவரவரை அவரவரின் ஊழ்வினை ஆள்வினை, சூழ்வினை, நாள், கோள், மீன், பாதிப்புக்கள்.........முதலியவைகள்தான் ஆட்சி செய்கின்றனவே தவிர; பெற்றோர், துணைவன் அல்லது துணைவி, மக்கள், உடன்பிறந்தார் முதலியோர் ஆட்சி செய்யவில்லை, ஆனால், குருதேவர் மூலமாக எதையும் எப்படியும்

விருப்பப்படி மாற்றியமைத்துக் கொள்ளலாம். ஏனெனில், குருவே எல்லாம். அனைத்தும் குருவழியே முளைத்துக் கிளைத்துச் செழித்துப் பயன் நல்கிட வேண்டும். அனைத்துக்கும் குருவே கருவாக, தருவாக, திருவாக இருக்கிறார். குருவே எல்லோர்க்கும் எவர்க்கும் வழியாக, வழிகாட்டியாக, வழித்துணையாக, வழிப்பயனாக இருந்திட முடியும். குருவழிப்பத்தியே அனைத்து வகையான சத்தி, சித்தி, முத்திகளையும் பெற்றுத் தரும். குருவோடு இரண்டறக் கலத்தலே பிறவாமையையும், இறவாமையையும் தரும். குருதேவருக்குள் நாம், நமக்குள் குருதேவர் என்ற நிலையை அடைபவரே மும்மலங்களையும், மும்மாயைகளையும், முக்கன்மங்களையும், வென்ற நிர்வாண நிலையை அடைய முடியும். குருவால் இட்டும் தொட்டும், சுட்டியும் அருளப் பெற்றவர்களே அருளுலகப் பொருளுலக இருளகற்றி அருட் பெருஞ்சோதி வடிவதனைப் பெற்றிட முடியும்''

''எவனொருவன் தன்னை முழுமையாகக் குருவுக்குக் காணிக்கையாக்கிக் குருதேவரை முழுமையாகப் பத்திசெய்து வாழுகின்றானோ? அவனுக்குள் குருதேவர் வாழ ஆரம்பித்திடுவார். அதன்பிறகு, அவன் குருதேவராகவே தனது சொல்லிலும் செயலிலும் வாழ்ந்திடுபவன் ஆகிறான். அப்படியல்லாமல், உதட்டளவில் 'குருதேவருக்குள் நான், எனக்குள் குருதேவர் என்று திரிபவன் எந்த நொடியிலாவது எதிர்பாராமல் மாபெரும் வீழ்ச்சியையும், தாழ்ச்சியையும் பெற்றுக் குருத் துரோகியாகவும், குருவிரோதியாகவும், அறிமுகப்பட்டிட நேரிடும். எனவே இந்துமத வளர்ச்சிக்காகவும், வலிமைச்செழிச்சிக்காகவும், ஆட்சிமாட்சிக்காகவும் உழைப்பவனே சிறந்த அருளாளனாகத் தேர்ந்திடுவான்'' என்பது தான் பதினெண் சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புக்களும் இந்துமத அருளுலகப் பயிற்சியாளர்களுக்கு விடுத்துக் கொள்ளும் அறிவுரை.

''கனவுகளையும் கற்பனைகளையும் வளர்த்துக் கொள்பவன் காலமெல்லாம் கடவுளைக் கைகூப்பித் தொழுதாலும், கண்ணீர் மல்கிக் கதறி வழிப்பட்டாலும், அனைத்துக் கடமைகளையும் உதறிவிட்டுக் கடவுள் பணிக்கே கைகட்டியும், கை நீட்டியும் செயல்பட்டாலும் நிறைவையும் நிம்மதியையும் பெறுதல் அரிது.

''எம்மால் உருவாக்கப்பட்டவர்களே! நீங்கள் இளைஞர்கள் என்றோ, முதியவர் என்றோ, சிறுவர்என்றோ, ஆண்என்றோ, பெண்என்றோ எண்ணாமல் நமது தாயகத்தின் நீடுதுயில் நீங்கிடப் பாடிடும் பல்வேறு வகைப் பறவைகளாக மாறி நாடெங்கும் பறந்து செல்லுங்கள். நமது பத்திநெறி வரலாறுப் பற்றி பாடுங்கள்; நமது சத்தி நெறி பற்றி விளக்குங்கள்; நமது சித்தி நெறியின் அருமை பெருமைகளை அறிவிப்புச் செய்யுங்கள். எல்லோரையும் நல்லவராக்குங்கள். முடிந்தவரை பொல்லாதவரை அழிக்கப் போதுமான வல்லவர்களை உருவாக்குங்கள். இனிப்போரின்றிச் சமாதானமில்லை; இனி அழிவின்றிச் செழிப்பில்லை; இனி பாடி வீடும், பாசறையும் அமைத்துப் படை நடத்திச் செயல்படாமல்; நம் பகைவர்கள் நம்மை விட்டு போகமாட்டார்கள். இனிமேலாவது விழிச்சியாலும், எழிச்சியாலும், கிளர்ச்சியாலும் பகைவர்களை அடியோடு அழிக்க முயற்சிகள் செய்தால் தான்; அவர்கள் விடிவதற்கு முன்னே சொல்லாமல் நம் தாயகத்தை விட்டு ஓடிட முடிவு எடுப்பார்கள். நமது வழிபாட்டு நிலையங்களிலே முரசு முழங்கட்டும்; பறை ஒலிக்கட்டும். மணியோசைகள் எங்கும் எதிரொலிக்கட்டும்; இவற்றால், நமது மொழி இன மதப் பண்பாட்டுப் பகைவர்கள் இடியோசை கேட்ட நாகம் போல் அரண்டு மிரண்டு மாண்டு மடிவார்கள். அப்பொழுதாவது நமது தத்துவங்களும், செயல் சித்தாந்தகளும் அருகுபோல் முளைக்கட்டும். ஆல்போல் தழைந்து நிலைக்கட்டும்........

— அமராவதியாற்றங்கரைக் கருவூரரின் வாசகம்

''இருள்சேர் உலகின் இன்னல்கள் அகற்றி
அருள்சேர் உலகுடைத லரிது''

— குருபாரம்பரிய குறட்பா

# அருளுலகின் அகற்றவியலாக் காரிருள்

**''எல்லாக் கடவுள்களும் தாடி, மீசை, முடி உடையவர்களே''.**

பல்வேறு காரணங்களால், மூன்ருவது தமிழ்ச் சங்கத்தின் அழிவையும், பாண்டிய வேந்தன் வடஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியனின். வீழ்ச்சியையும், மதுரை மாமூதூரின் பேரழிவையும் அடுத்துப் பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங் -கரைக் கருவூரார் அவர்கள் 'இந்துமறுமலர்ச்சி இயக்கம்' என்ற அமைப்பையும்; இதன் கீழ் நாற்பத்தெட்டு வகையான நிறுவன நிருவாகங்களையும் தோற்றுவித் -தார். இவற்றிற்காக, எண்ணற்ற நூல்கள் எழுதியபோதிலும்; பதினெண் சித்தர் பீடாதிபதிகள் மட்டுமே எழுதிடும் 'குருபாரம்பரியம்' (The Religious History), 'இலக்கிய பாரம்பரியம்' (The Social History; and the History of the Language and the literature), 'அரசபாரம்பரியம்' (The Politica History) எனும் மூன்றிலும் குறிப்பாகவும், சிறப்பாகவும் தமக்கு மட்டுமே, 'பொய்யான ஹிந்து மதத்தை' எதிர்த்துப் போராடும் வாய்ப்பு ஏற்பட்டுவிட்டது பற்றியும்; அதற்காகத்தாம் செய்யும் முயற்சிகள் பற்றியும் மிகத் தெளிவாக ஏராளமான செய்திகளைக் குறித்துள்ளார்'.

இந்தப் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதிதான். 'இளமுறியாக்கண்டம்' ('குமரிக்கண்டம்'), 'வட இமயமலை', 'வட கங்கை', 'வட பிறம்மபுத்திரா', 'வட யமுனை', 'வட சிந்து',...... இந்து ஆறு, அருட்பாநகர் (அரப்பா), மோகஞ் சிதரு நகர் (மொகஞ்சோதரா), தொன்மதுரை, தென் மதுரை, கபாடபுரம், மூன்று கடல் கோள்கள், மூன்று தமிழ்ச்சங்கள், நான்கு உகங்கள் (நான்கு யுகங்கள்), மானுட இனத்தின் வாழ்வு நான்குயுகத்திற்குரிய நாற்பத்தெட்டு இலட்சம் ஆண்டுகள், இந்துமதம் தோற்றுவிக்கப்பட்டது கி.மு. 43, 71, 101 ஆம் ஆண்டு; பிறமண்ணி -னரான பிருமணர் எனப்படும் வடஆரியர்கள் இந்தியாவிற்குள் வந்தது கலியுகம் பிறந்து 1359 ஆண்டுகள் கழித்தே'; சமசுக்கிருதம் என்ற மொழி வட ஆரியரின் எழுத்தற்ற பேச்சுமொழியும் தமிழ் எழுத்துக்களும் சேர்ந்து உருவாக்கப்பட்ட ஒன்றேயாகும்'; அதுவும் தமிழுக்குச்சமமாக' சமம்' + உருவாக்கப்பட்டது 'கிருதம்' [கிருதம் = செய்யப்பட்டது, உருவாக்கப்பட்டு —> வட ஆரிய மொழி விளக்கம்] = சம + கிருதம —> சமசுக்கிருதம்... என்பன போன்ற பல அரிய பெரிய நுட்ப மிகு வரலாற்றுச் செய்திகளையெல்லாம்விளக்குகிருர் இவருடைய குருபாரம்பரியத்தில்; கடவுளைப் பற்றிக் கூறும் ஒரு சுவையான செய்தியை இங்கு குறிக்கிறோம் யாம். [இ ம.இ. யின் இரண்டாவது தலைவர், சிற்தர் காகபுசுண்டர் எனப்படும் சித்தர் காக்கையர் ம. பழனிச்சாமி பிள்ளை, காக்கா வழியன் பண்ணையாடி; 'முடிகணம்' எனப்படும் முடிகண்ட சோழபுரம் (திருச்சி மாவட்டக் கரூர் வட்டம்) இங்கு **பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதியின் குருபாரம்பரிய வாசகத்தைக் குறிக்கின்றோம் யாம்.**

''.........அருளுலகின் அகற்றவியலாக் காரிருளாகத் தாடி, மீசை, தலைமுடி பற்றி அருளுலகக் கண்ணோட்டமும். கருத்தோட்டமும், மெய்யான தத்துவமும் பொதுமக்களால் தெரிந்து கொள்ள முடியாமலிருப்பதுதான். அருளுலகில், எந்தப் பயிற்சியைச் செய்வதானுலும் சரி; எத்தகைய முயற்சிகளை மேற்கொள்வதானுலும் சரி; அவர்கள், **கட்டாயமாக மேற்கொள்ள வேண்டிய செயல் திட்டம் தாடி, மீசை, முடி முதலியவைகளை வெட்டாமல் வளர்க்க வேண்டும் என்பதுதான்.** ஆனுல் மண்ணின்பம், பெண்ணின்பம், பொன்னின்பம் எனற மூன்றையும் முழுமையாகத் துறக்கவும் மறக்கவும் துணிவுள்ள -வர்கள் மட்டுமே எல்லா முடிவுகளையும் முழுமையாக மழித்தெடுத்திட வேண்டும். இதுதான், அண்டபேரண்டமாளும் மெய்யான **இந்துமதத்தின்** அடிப்படையான

சட்டதிட்டக் கட்டுப்பாட்டு விதியாகும். இதற்குக் காரணம், உலக மதங்கள் அனைத்திலுமே கடவுள்களாக வழிபடப்படுகிறவர்கள் அனைவருமே தாடி, மீசை முடியோடுதான இருக்கிறார்கள் இந்து மதத்துக்கே உரிய மூலவர்கள், முன்னணி -யினர்கள்... எனப்படும ஆதிசிவன் ஆதி மாயோன், ஆதி பிறமண், ஆதிதேவேந் -திரன், ஆதிஇந்திரன் ஆதிக் குபேரன், ஆதிஇயமன், முருகன் (ஒரே முருகன் 32 வயது) ஆதி ஐயனர் .. முதல் இன்றுவரை தோன்றியுள்ள பல நூறாயிரக்கணக் கான சிவன்களும், மாயோன்களும் .. தாடி. மீசை முடியுடன்தான் இருக்கிறார்கள். இப்பேருண்மை புரிந்தால்தான், இந்துமதத்தில் உள்ள' குருநிலையோர்', 'குருக்கள் நிலையோர்', 'குருமார் நிலையோர்', 'பூசாறி நிலையோர்' எனும் நால்வகையினரும் எப்படிப் பயிற்சி முயற்சி செய்து தேர்ச்சி பெற வேண்டும்; எப்படியெப்படி வாழ்ந்து அருட்பயிர் செய்து வறுமையையும், வெறுமையையும் அகற்ற வேண்டும்... என்ற தெய்வீகத் தத்துவங்களும், சித்தாந்தங்களும் விளங்கிடும்! செயலாகிடும்!!... அதன் பிறகுதான், இந்துமதத்தின் 'பத்தம்', 'புத்தம்', 'போத்தம்', 'முத்தம்', 'சீவன் முத்தம்', 'சித்தியாந்தம்' எனும் அறுவகைச் சமயம் செழிக்கும்! செழிக்கும்! செழிக் -கும்! செழிக்கும்! பயனுற்றிடும்! பயனுற்றிடும்! பயனுற்றிடும்! பயனுற்றிடும்!

குறிப்பாக இந்து மதத்தில் ஆதி சிவனுக்கும் தென் இமயமலைத் தலைவன் மகள் மலைமகளுக்கும் பிறந்த முருகன் விண்ணுலக மங்கை தெய்வானையையும் மண்ணுலக மங்கை வள்ளியையும் மணந்து முப்பத்திரண் -டாண்டு வயதாகியும் மக்கட்பேறு இல்லாமையால் தனது பதினெண்சித்தர் பீடாதி பதிப் பதவியைத் துறந்து பதினெட்டுப் படை வீடுகளில் அருவுருவ சமாதியானன் (ஆறுபடை வீடுகள் பதினெண்சித்தர்களுக்கு; ஆறுபடை வீடுகள் தேவர்களுக்கு; ஆறுபடை வீடுகள் மானுடர்க்கு] அப்படி முருகன் சமாது ஆகும் போது நீள் முடியும், முறுக்கு மீசையும் குறுந்தாடியும் தான் பெற்றிருந்தான். எனவே, ''கடவுளாக மாறும் மானுடர் அனைவரும் தாடி, மீசை, முடி வைத்திருந்தேயாக வேண்டுமென்பது தான் சட்டம்''. அதாவது, ''எல்லாக் கடவுள்களுமே தாடி. மீசை முடியுடையவர்களே......''.

இந்தப் பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதியின் குருபாரம்பரிய வாசகம் தான், இன்றைக்கு ஓவியங்களிலும் சிற்பங்களிலும், அழகுற வார்க்கப்படும் உலோகச் சிலைகளிலும், நுட்பமாகச் செய்யப்படும் பொம்மைகளிலும் வடிவப்படுத்திக் காட்டப்படும் கடவுள்களின் வடிவங்கள் பிழையானவை, தவறானவை என்ற பேருண்மையை விளக்குகிறது அதாவது, தேவகுமாரனைப் பிறந்த முருகன் உட்பட அனைவருக்கும் தாடி, மீசை முடித ரிருந்தது வனவாசம் முடித்து நாடு திரும்பி முடிசூடி அரியணையில் அமர்ந்த இராமபிரான் பாரதப் பெரும்போரை நிகழ்த்தி முடித்த கண்ணபிரான் ஆகிய இருவரும் கூட இறுதிக் காலத்திலும் அவ்வப்போது அருளை வெளிப்படுத்திய காலங்களிலும் தாடி, மீசை, நீள்முடியுடன் இருந்தனர் என்றுதான் குருபாரம்பரியம்; சித்தர் சிவபுராணம், முருகபுராணம், மாபுராணம், சித்தர் மாயோன் புராணம், சித்தர் பிறம்மபுராணம், சித்தர் தேவேந்திர புராணம், சித்தர் இந்திர புராணம், சித்தர் இராமாயணம், சித்தர் பாரதம் முதலிய இலக்கிய பாரம்பரிய நூல்கள் ஆகிய அனைத்தும் கூறுகின்றன.

# "எல்லாக் கடவுள்களும் தாடி, மீசை, முடி உடையவர்களே!"

இவற்றுள், மண், பெண், பொன் எனும் மூவாசைகளுக்கும் அப்பாற் பட்ட மறவிகளும் துறவிகளும்தான் தாடி, மீசை, தலைமுடி....... முதலிய வற்றைக் குறைத்தலோ! மழித்தலோ செய்யலாம் என்பதும்; இல்லறத்தார் தாடியைக் குறைத்துக் கொள்ளுதல்; அல்லது முழுமையாக அகற்றிக் கொள்ளுதல்; மீசையை விருப்பம் போல் வெட்டித் திருந்திய வடிவ மைப்புச் செய்து கொள்ளுதல்; தலைமுடியைப் பிடரி வரை அழகாக வைத்து நறுக்கிக் கொள்ளுதல் அல்லது குறைத்துக் கொள்ளுதல் என்பதும், மற்றபடி அருளாளர் என்ற நிலையை நாடும், தேடும், அடையும்......அனைவரும் தாடி, மீசை, முடி வளர்த்தேயாக வேண்டும்.

இதுதான், கி.மு. 43, 73, 101, ஆம் ஆண்டில்; தொன் மதுரையில் அமைந்த, இம்மண்ணுலகின் முதல் அரசாங்கத்தின் அரசனான ஆதிசிவன்; அரசியல் சட்டபூர்வமாக வழங்கிய பதினெண் சித்தர்களின் சித்தர் நெறியான 'சிவநெறி' (சிவநெறி—>சைவநெறி) யெனும் 'இந்து மதத்தின்' அருளுலக வாழ்வியல் நியதி, நீதி. எனவே, இந்துமதக் கடவுள்களின் மெய்யான வடிவமும், அருளாளர்கள் பெற்றிருக்க வேண்டிய தோற்றமும் இனியாவது இந்துக்களால் உணரப்படல் வேண்டும்.

இந்து மறுமலர்ச்சி இயக்கம்

பாரம்பரியத் தலைவர் — 'சித்தர் காகபுசுண்டர்' எனப்படும்
சித்தர் காக்கையர் ம. பழனிச்சாமிபிள்ளை,
காக்கா வழியன் பண்ணையாடி,
'முடிகணம்' எனப்படும் முடிகண்ட சோழபுரம்
கரூர் வட்டம், திருச்சி மாவட்டம்
10 - 10 - 1957

வெளியீடு: பதினெண் சித்தர் மடம்: தலைமைப் பீடச்செயலகம்
8-விசயலக்குமி நகர், கொளத்தூர், சென்னை-99

KVS கருணை அச்சகம், தேரடி தெரு, பொன்னேரி.